ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 2.4 – ஆடியாடி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 2.4 – ஆடியாடி

‡ ஆடி ஆடி ⋆
அகம் கரைந்து ⋆
இசை பாடிப் பாடிக் ⋆
கண்ணீர் மல்கி ⋆
எங்கும் நாடி நாடி ⋆
நரசிங்கா ! என்று ⋆
வாடி வாடும் ⋆
இவ்வாணுதலே ‖ **2.4.1** ‖

வாணுதல் ⋆
இம்மடவரல் ⋆
உம்மைக் காணும் ஆசையுள் ⋆
நைகின்றாள் ⋆
விறல் வாணன் ⋆
ஆயிரம் தோள் துணித்தீர் ⋆
உம்மைக் காண நீர் ⋆
இரக்கம் இலீரே ‖ **2.4.2** ‖

இரக்க மனத்தோடு ⋆
எரி அணை ⋆
அரக்கும் மெழுகும் ⋆
ஒக்கும் இவள் ⋆
இரக்கம் எழீர் ⋆

இதற்கென் செய்கேன் ⋆
அரக்கன் இலங்கை ⋆
செற்றீருக்கே ॥ **2.4.3** ॥

இலங்கை செற்றவனே என்னும் ⋆
பின்னும் வலம் கொள் ⋆
புள் உயர்த்தாய் என்னும் ⋆
உள்ளம் மலங்க ⋆
வெவ்வுயிர்க்கும் ⋆
கண்ணீர் மிகக் கலங்கிக் ⋆
கை தொழும் நின்றிவளே ॥ **2.4.4** ॥

இவள் இராப் பகல் ⋆
வாய் வெரீ இ ⋆
தன குவளை ஒண் ⋆
கண்ண நீர் கொண்டாள் ⋆
வண்டு திவளும் ⋆
தண்ணம் துழாய் கொடீர் ⋆
என தவள வண்ணர் ⋆
தகவுகளே ॥ **2.4.5** ॥

தகவுடையவனே என்னும் ⋆
பின்னும் மிக விரும்பும் ⋆
பிரான் என்னும் ⋆
எனதக உயிர்க்கு ⋆
அமுதே என்னும் ⋆
உள்ளம் உக உருகி ⋆
நின்றுள் உளே ॥ **2.4.6** ॥

உள்ளுள் ஆவி ⋆
உலர்ந்துலர்ந்து ⋆
என வள்ளலே ⋆
கண்ணனே என்னும் ⋆
பின்னும் வெள்ள நீர்க் ⋆
கிடந்தாய் என்னும் ⋆
என கள்வி தான் ⋆
பட்ட வஞ்சனையே ‖ **2.4.7** ‖

வஞ்சனே என்னும் ⋆
கை தொழும் ⋆
தன நெஞ்சம் வேவ ⋆
நெடிதுயிர்க்கும் ⋆
விறல் கஞ்சனை ⋆
வஞ்சனை செய்தீர் ⋆
உம்மைத் தஞ்சம் என்று ⋆
இவள் பட்டனவே ‖ **2.4.8** ‖

பட்ட போது ⋆
எழு போதறியாள் ⋆
விரை மட்டலர் ⋆
தண் துழாய் என்னும் ⋆
சுடர் வட்ட வாய் ⋆
நுதி நேமியீர் ⋆
நுமதிட்டம் என் கொல் ⋆
இவ் ஏழைக்கே ‖ **2.4.9** ‖

ஏழை பேதை ⋆
இராப் பகல் ⋆
தன கேழில் ⋆
ஒண் கண்ண நீர் கொண்டாள் ⋆
கிளர் வாழ்வை வேவ ⋆
இலங்கை செற்றீர் ⋆
இவள் மாழை நோக்கு ⋆
ஒன்றும் வாட்டேன்மினே ‖ **2.4.10** ‖

‡ வாட்டமில் புகழ் ⋆
வாமனனை ⋆
இசை கூட்டி ⋆
வண் சடகோபன் சொல் ⋆
அமை பாட்டு ⋆
ஓர் ஆயிரத்திப் பத்தால் ⋆
அடி சூட்டல் ஆகும் ⋆
அம் தாமமே ‖ **2.4.11** ‖

அடிவரவு — ஆடியாடி வாணுதல் இரக்க இலங்கை இவள் தகவு உள்ளுளாவி வஞ்சனே பட்டபோது ஏழை வாட்டம் அந்தாமம்

ஆடியாடி முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்